# முகாமைத்துவ சேவைள் திணைக்களம்

# 2012

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

**பொதுத் திறைசேரி**

**கொழும்பு 01**

தொலைபேசி : 011 -2484757

தொலைநகல்: 011-2430270

மின்-அஞ்சல் : dgms@msd.treasury.gov.lk

# நோக்கு

**அரசாங்கத் துறையின் ஊழியர் எண்ணிக்கை முகாமை,வேதன முகாமை மற்றும் ஆலோசனை வழங்கல் என்பவற்றுக்கான முன்னணி அரச நிறுவனமாக மிளிர்தல்**

# பணி

**அரசாங்க சேவையை சிறப்பான மட்டத்தில் பேணி வருவதற்கு அவசியமான முகாமைத்துவ உதவிகளை அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குதல்**

**பணிப்பாளர் நாயகத்திடமிருந்து ........................**

அரச துறையைப் பலப்படுத்தி, வினைத்திறன்மிக்கதும் நட்புறவானதுமான சேவைகளை மக்களுக்கு வழங்கும் அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் மனித வளங்களை மிகவும் பயனுறுதிவாய்ந்த முறையில் முகாமை செய்யும் சவால்மிக்க பணியை 2012 ஆம் ஆண்டில் மிகவும் சிறப்பான முறையில் மேறகொள்ள முடிந்தமை மகிழ்ச்சியளிக்கும் ஒரு விடயமாகும்.

இலங்கையை ஆசியாவிலும் உலக பொருளாதாரத்திலும் சிறந்த்தொரு நிலைக்கு கொண்டுவரும் அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளினை அடையப்பெறுவதற்காக தேர்ச்சியும் நிபுணத்துவமும் பெற்ற அரச சேவையொன்றை உருவாக்குவதே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அடிப்படை நோக்கமாகும். அதற்கிணங்க, அரசாங்க சேவையில் போற்றத்தக்க ஊழியர் குழாத்தை தீர்மானிப்பது தொடர்பில் பாரியளவில் பங்களிப்பு வழங்கப்பட்ட ஒரு வருடம் என 2012 ஆம் ஆண்டைக் குறிப்பிட முடியும்.

எமது திணைக்களத்தின் பணிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கான வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கிய நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளர் திரு. பீ.பி.ஜயசுந்தர அவர்களுக்கும், திறைசேரியின் பிரதிச் செயலாளர்களுக்கும் சகோதரத் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முக்கியமான பணிகளை ஆற்றுவதன் மூலம் ஒத்துழைப்பு வழங்கிய தேசிய சம்பள மற்றும் ஊழியர் தொகை ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, ஏனைய நிரல் அமைச்சுக்கள் என்பவற்றின் உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.மேலும், திணைக்களத்தின் பணிகளை மேற்கொள்வதில், கூட்டாக குழு உணர்வுடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட்ட ஊழியர் குழாத்திற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்.கொடகந்த
பணிப்பாளர் நாயகம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 1 |
| 2. பதவியணி முகாமை | 3 |
| 3. சம்பள மற்றும் வேதன முகாமை | 11 |
| 4. ஆய்வுச்செயற்பாடுகள், தகவல் மற்றும் தரவுத் தொகுதி | 12 |
| 5. தாபனப் பிரிவு | 16 |
| 6. நிதிப் பிரிவு | 25 |


## அட்டவணை


| | | |
|---|---|---|
| I. | நிர்வாக்க் கட்டமைப்பு | 27 |

# 1. அறிமுகம்

## 1.1 ஆரம்பம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது, நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் முதல் தரத்திலான ஒரு திணைக்களமாக 1999 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அன்று முதல் தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டங்களில் அரச துறையின் ஊழியத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவன மட்டத்தில்அவசியமான பதவியணியினை இனங்காணுதல், அவ்வாறு இனங்காணப்படும் பதவிகளுக்கான சம்பளங்களைத் தீர்மானித்தல், ஆட்சேர்ப்பு/ தரமுயர்வு நடைமுறைகளுக்கு அனுமதி வழங்குதல் போன்ற செயற்பாடுளின் ஊடாக அரச துறையின் மனித வளங்களை முகாமை செய்வதற்கு இத்திணைக்களம் உச்ச அளவில் பங்களிப்பு வழங்கியுள்ளது. இதன் போது நாட்டின் நிதி நிலைமை, அபிவிருத்திக்கான ஆற்றல், திறமைமிக்க அரச சேவையொன்றை உருவாக்குதல் என்பன தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது அவசியமாகக் காணப்பட்டது. இதற்காக, தேவையைப் பொறுத்து, தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பதவியணி மீளாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் அரச துறைக்கு அவசியமான சிறந்த மனித வளங்களைப் பேணி வருவதற்கு திணைக்களம் பாரியதொரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

## 1.2 குறிக்கோள்கள்

மிகவும் பயன்வாய்ந்த மனித வளம் ஒன்றினை அரசதுறையில் உருவாக்கும் பொருட்டு பல்வேறு குறிக்கோள்களுடன் இத்திணைக்களமானது செயற்பட்டு வருகின்றது.

i. அரசதுறையின் பதவியணி முகாமை
ii. தேசிய சம்பளக் கொள்கைகளின் பிரகாரம் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளைத் தீர்மானித்தல்.
iii. அரசதுறையின் பதவியணி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

## 1.3 பொறுப்புக்கள்

i. தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கும்/ மேல்நிலை நிறுவனங்களுக்கும் சேவை வழங்குதல்.
ii. அரச துறையில் மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துதல், நடைமுறைப்படுத்துதல், அவை தொடர்பான ஆய்வுகளை நடாத்துதல்.
iii. செயற்பணி, குறிக்கோள், முறைமை, ஒழுங்குவிதிகள் மற்றும் பதவியணி திட்டமிடல் என்பன பற்றிய நிறுவனங்கள் மீளாய்வுகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சிபாரிசுகளை வழங்குதல்.
iv. அரச நிறுவனங்களை மீள்கட்டமைத்தல் மற்றும் உரிய அளவிற்கு ஒழுங்கமைத்தல் என்பவற்றினை நோக்காகக் கொண்டு அரசதுறை நிறுவனங்களின் இரட்டை பணிகளை (Duplicating ) இனங்காணல்.

v. அரசதுறையின் வினைத்திறன் மற்றும் பயன்வாய்ந்த தன்மை என்பவற்றினை உறுதி செய்யும் நோக்கினை முதன்மைப்படுத்தி அமைப்பு ரீதியான மற்றும் பதவியணி மீளாய்வினை மேற்கொள்ளல், திட்ட முறைமைகளை மேம்படுத்தல், நிறுவனங்கள் கட்டமைப்புக்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் பலப்படுத்தல்.

vi. பதவியணியின் தேவைகள் பற்றிய ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவைகள் மற்றும் தரங்களைக் கட்டியெழுப்புதல்.

vii. மேலதிக பதவியணியை இனங்காணல், அவர்களை மீளப் பொருத்தமான முறையில் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் சேவை ஒழிப்பு முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

viii. பௌதீக சூழலை மேம்படுத்த வேண்டியதன் தேவைகள், இயந்திரமயப்படுத்தல்/ கணனிமயப்படுத்தல் மற்றும் சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் என்பன தொடர்பான துறைகளை இனங்காணல்.

ix. அபிவிருத்தி தேவைகளுக்கு பொருத்தமானவாறு சேவை பிரமாணக் குறிப்புக்கள், சேவை நிபந்தனைகள் பற்றிய மீளாய்வுகளில் ஈடுபடல் மற்றும் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.

x. அரசதுறையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீளப் பணிக்கமர்த்துதல், ஆலோசகர்களை பயன்படுத்தல் என்பன பற்றிய முன்மொழிவுகளை பரீட்சித்துப் பார்த்து சிபாரிசுகளை சமர்ப்பித்தல்.

xi. அரசாங்க சேவை மற்றும் மாகாண அரசாங்க சேவை என்பவற்றின் பதவியணி பற்றிய தகவல் முறைமையினை பேணிவருதல் மற்றும் மிக முக்கியத்துவம் வாய்ந்த பதவிகளுக்கு பதிலீட்டினை திட்டமிடல்.

xii. ஆட்சேர்ப்புக் கொள்கைகள், திறமைகள், அபிவிருத்திப் பயிற்சி மற்றும் பதிலீட்டுத் திட்டங்கள் என்பன தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடல் மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்துவதில் உரிய அதிகாரிகளுக்கு ஒத்துழைத்தல்.

xiii. அரசாங்க துறையின் சம்பளம் மற்றும் பணிக்கொடை, ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், நலன்புரி திட்டங்கள் மற்றும் அதனையொத்த ஊதிய இணைப்புக்கள் தொடர்பான முகாமைத்துவம்.

xiv. மாகாண சபைகள் மற்றும் மாகாண சபை நிறுவனங்களின் நிறுவனசார் மீளாய்வுகளை மேற்கொள்ளுதலும் பதவியணி மற்றும் சம்பள முகாமைத்துவம் பற்றிய ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

xv. அரசாங்க மற்றும் கூட்டுத்தாபனத் துறைகளில் முதியோருக்கான நன்மையளிக்கும் திட்டங்கள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடல்.

## 2. பதவியணி முகாமை

அரச துறையின் மனித வளங்களை முகாமை செய்வதில், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வகிபாகமானது, பின்வரும் முக்கியமான செயற்பாடுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

- புதிய பதவிகளை உருவாக்குவதற்கு அனுமதி வழங்குதல்
- பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதல்
- பதவிகளை இல்லாதொழித்தல்
- பதவிப் பெயர்களை திருத்துதல்
- அரசாங்க செயற்திட்டங்களுக்கான பதவியணிகளுக்கு அனுமதி வழங்குதலும் சம்பளங்களைத் தீர்மானித்தலும்

இதனடிப்படையில், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க செயற்திட்டங்கள் போன்ற துறைகளின் காலத்துக் காலம் ஏற்படும் தேவைகளையும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் தேவைகளையும் கவனத்தில் எடுத்து நாட்டில் சிறந்ததொரு அரச ஊழியர் தொகையைப் பேணி வருவதற்காக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2012 ஆம் ஆண்டில் ஆற்றிய பணிகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

### 2.1 அரச துறை ஊழியர் படையும் துறைசார் கட்டமைப்பும்

2012.12.31 ஆந் திகதியில், தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் மொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை 1,279,849 ஆகக் காணப்பட்டது. அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அரசாங்கத் தொழில் முயற்சிகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரைக் கொண்ட அரச துறையின் ஊழியர் கட்டமைப்பானது தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டத்தில் பின்வருமாறு அமைந்திருந்தது.

அட்டவணை இல - 01 அரச துறை ஊழியர் படை - 2012

| நிர்வாக மட்டம் | அனுமதியளிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி |
|---|---|---|
| தேசிய மட்டம் | 9,56,009. | 9,00,916 |
| மாகாண மட்டம் | 334,877 | 329,652 |
| உள்ளூராட்சி நிறுவனங்கள் | 50,685 | 49,281 |
| **மொத்தம்** | **13,41,571** | **12,79,849** |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 2.2 அரச துறை ஊழியர் எண்ணிக்கை முகாமை - 2012

அரச சேவையானது வினைத்திறன்மிக்க முறையிலும் பயனுறுதிவாய்ந்த முறையிலும் பொது மக்களுக்கு சேவை வழங்குவதை இலகுபடுத்துவதற்காக, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அரசதொழில் முயற்சிகள் என்பவற்றிடமிருந்து கிடைக்கும் கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து அரச துறையில் பதவியணியை சிறந்த மட்டத்தில் பேணுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2012 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுத்தது. ஊழியர் தேவைகளுக்கு இணங்கப் புதிதாகப் பதவிகளை உருவாக்குதல், உரிய சந்தர்ப்பங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்கள அனுமதி வழங்குதல், காலத்தினதும் சேவைத் தேவைப்பாடுகளுக்கும் இணங்கத் தொடர்ந்தும் பேணி வரப்படும் அவசியமற்ற பதவிகளை இல்லாதொழித்தல், பதவிப் பெயர்களைத் திருத்துதல், சம்பளத் தொகுதிளைத் தீர்மானித்தல் ஆகிய பணிகளின் ஊடாக அரசாங்க சேவையின் பதவியணி முகாமைக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

2012 ஆம் ஆண்டில் அரச நிறுவனங்களுக்கு பதவிகளைப் புதிதாக உருவாக்குகின்ற போது, நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்காகப் பட்டதாரிகளை அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் அரசாங்கத்தின் கொள்கையை விசேடமாகக் குறிப்பிட்டாக வேண்டும். இதனடிப்படையில் 2012 ஆம் ஆண்டில் "அபிவிருத்தி உத்தியோகத்தர்" என்ற பதவிப் பெயரில் 25,201 பட்டதாரிகளுக்கான பதவிகள் புதிதாக உருவாக்கப்பட்டன. இத்தொகையானது 2012 ஆம் ஆண்டில் அரச துறையில் புதிதாக உருவாக்கப்பட்ட 49,157 பதவிகளில் 51 சதவீதமாகக் காணப்பட்டது.

### 2.2.1 புதிய பதவிகளின் உருவாக்கம் 2012

புதிய பதவிகளைப் புதிதாக உருவாக்கும் போது உரிய நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள், நாட்டின் நிதி நிலைமைகள், வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் என்பனவும் பதவிகளை உருவாக்குவதற்கான காலத்தின் தேவைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டன. அரச துறைக்குப் புதிய பதவிகளை உருவாக்குவது தொடர்பில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மட்டத்தில் செய்யப்பட்ட வகைப்படுத்தல்கள் 2009-2012 இடைப்பட்ட காலத்திற்கான தகவல்களுடன் கீழே அட்டவணை 02 இல் காட்டப்பட்டுள்ளன.


அட்டவணை - 02 புதிய பதவிகளின் உருவாக்கம் - 2009 -2012

| நிறுவனம் | 2009 | | 2010 | | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பதவி எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவி எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவி எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவி எண்ணிக்கை | சதவீதம் (%) |
| அமைச்சுக்கள் | 1,769 | 4.0 | 1,095 | 20.7 | 1,498 | 37.9 | 28,753 | 58.5 |
| திணைக்களங்கள் | 40,095 | 90.0 | 828 | 15.6 | 1,140 | 28.9 | 8,004 | 16.3 |
| மாகாண சபைகள் | 1,641 | 3.7 | 2,811 | 53.0 | 523 | 13.2 | 8572 | 17.4 |


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நியதிச்சட்ட நிறுவனங்கள் | 1,027 | 2.3 | 568 | 10.7 | 534 | 13.5 | 2217 | 4.5 |
| அபிவிருத்திச் செயற்திட்டங்கள் | | | | | 255 | 6.5 | 1,611 | 3.3 |
| **மொத்தம்** | **44,532** | **100** | **5,302** | **100** | **3,950** | **100** | **49,157** | **100** |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

புதிய பதவிகளின் உருவாக்கம் 2012




புதிய பதவிகளின் உருவாக்கம் 2009 – 2012



2.2.2 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதல் - 2012

2007.08.01 மற்றும் 2007.10.15 ஆந் திகதிய 36 மற்றும் 36 (i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகள் மூலம், 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள MN, MT, SL, PL ஆகிய சம்பளத் திட்டங்களுக்கு இணங்க உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறுகை/ பதவி விலகல்/ மரணம்/ சேவையைத் துறந்து செல்லல் போன்ற காரணங்களினால் அரசாங்க சேவையிலும் உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட மாகாண அரசாங்க சேவையிலும் உருவாகும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான/ நியமனம் செய்வதற்கான அதிகாரங்களை உரிய நிரல் அமைச்சின் செயலாளர்களுக்கும் மாகாணங்களின் பிரதம செயலாளர்களுக்கும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும். இச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு உட்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொடர்ந்தும் முகாமைத்து சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறுவது அவசியமாகும். அதனால், சேவைத் தேவைப்பாடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தி, 2012 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கோரிக்கைகளின் அடிப்படையில் 8952 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் அனுமதி வழங்கியது.

அட்டவணை இல - 03 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்கல் - 2012

| **நிறுவனம்** | **எண்ணிக்கை** | **சதவீதம்(%)** |
|---|---|---|
| அமைச்சுக்கள் | 2,838 | 32 |
| திணைக்களங்கள் | 2,765 | 31 |
| மாகாண சபைகள் | 3,349 | 37 |
| **மொத்தம்** | **8,952** | **100** |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

பதவிகளை இல்லாதொழித்தல் மற்றும் பதவிப்பெயர்களைத் திருத்துதல்

அரச துறை பதவியணி முகாமையின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணி, நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குவதற்கும் புதிய பதவிகளை உருவாக்குவதற்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதன்று. அரசாங்க நிறுவனங்களில் நிலவும் பயனுறுதியானதாகவோ காலத்துக்குப் பொருத்தமானதாகவோ இல்லாத பதவிகளை அடையாளம் கண்டு, உரிய நிறுவனங்களின் இணக்கப்பாட்டுடன் அப்பதவிகளை இல்லாதொழித்தல், காலத்தின் தேவைகளுக்குப் பொருத்தமான முறையில் பதவிப் பெயர்களைத் திருத்துதல், கடமைகளின் தன்மைக்கு ஏற்ப தற்போதுள்ள பதவிகளை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளும் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியமான பணிகளில் அடங்கும். இப்பணிகளை மேற்கொள்வதற்காகத் திணைக்களத்திடமுள்ள தரவுத் தொகுதியும் ஆய்வுப் பிரிவின் ஊழியர் குழாமும் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன. 2009 - 2012 காலப் பகுதியில் அரச துறையிலிருந்து இல்லாதொழிக்கப்பட்ட பதவிகள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் அட்டவணை இல -04 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இல - 04 பதவிகளை இல்லாதொழித்தல் 2009-2012

| நிறுவனம் | இல்லாதொழிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | **2009** | **2010** | **2011** | **2012** |
| அமைச்சுக்கள் | 465 | 12 | 32 | 95 |
| திணைக்களங்கள் | 1208 | 174 | 512 | 1853 |
| மாகாண சபைகள் | 165 | 329 | 62 | 66 |
| நியதிச்சட்ட நிறுவனங்கள் | 250 | 24 | 66 | 8 |
| **மொத்தம்** | **2088** | **539** | **672** | **2022** |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2.3 செயற்திட்டங்களுக்கான பதவியணிகளுக்கு அனுமதி வழங்கலும் சம்பள முகாமையும்

தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களைத் திட்டமிடப்பட்ட காலப் பகுதியினுள் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பதவியணிகளுக்கு அனுமதி வழங்குதல், அப்பதவிகளுக்கான சம்பளங்களைத் தீர்மானித்தல் என்பன 2007.04.05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் மூலம் இத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் இச்செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், செயற்திட்ட முகாமை மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் என்பன இத்திணைக்களத்திற்குச் சிறந்த முறையில் ஒத்துழைப்பு நல்கின. 2011 ஆம் ஆண்டில் 10 செயற்திட்டங்களின் கீழ் அனுமதி வழங்கப்பட்ட 255 பதவிகளுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் 27 அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கீழ் 1611 புதிய பதவிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அட்டவணை இல - 05 செயற்திட்டங்களுக்கான பதவியணிகளுக்கு அனுமதி வழங்குதல் - 2012

| தொடர் இலக்கம் | **செயற்திட்டம்** | பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச துரித அபிவிருத்திச் செயற்திட்டம் | 28 |
| 02 | கொழும்பு தலைநகரச் சுற்றுப்புற நகர அபிவிருத்திச் செயற்திட்டம் | 339 |
| 03 | இலங்கை சுனாமிக்குப் பின்னரான கிழக்குக் கரையோர மீள் உருவாக்க, நிலைத்துநிற்கும் முகாமைச் செயற்திட்டம் | 01 |
| 04 | பாதுகாப்புத் தலைமையகக் கட்டடத் தொகுதிச் செயற்திட்டம் | 53 |
| 05 | உள்ளூராட்சி நிறுவன மேம்பாட்டுச் செயற்திட்டம் | 123 |
| 06 | மாகாண வீதிச் செயற்திட்டம் - கிழக்கு மாகாணம் | 01 |

| | | |
|---|---|---|
| 07 | அபிவிருத்தி அடைந்துவரும் பிரதேசங்களை இலக்காகக் கொண்ட சமூக சேவை மேம்பாட்டுச் செயற்திட்டம்<br>சப்ரகமுவ மாகாணம் - வரகாபொலை ஆதார வைத்தியசாலை வடமேல் மாகாணம் - கல்கமுவை ஆதார வைத்தியசாலை மத்திய மாகாணம் - தெல்தெனிய ஆதார வைத்தியசாலை கிழக்கு மாகாணம் - களவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை | 10<br>10<br>10<br>10 |
| 08 | மாகாண வீதிச் செயற்திட்டம் | 01 |
| 09 | அறிவு நிலையத்தின் அடிப்படையாக பாடசாலைக் கல்வித் தொகுதியை மீள்நிர்மாணம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை பாடசாலை அறிவு நிலையத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைமைக்கு மாற்றும் செயற்திட்டம். | 14 |
| 10 | இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டம் | 16 |
| 11 | இலங்கையின் விஞ்ஞான விவகாரங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை வேலைச் சட்டகத்திற்கான செயற்திட்டம் | 41 |
| 12 | கண்டி நகர அழுக்கு நீர் முகாமைத் தொகுதி | 09 |
| 13 | விசல் தம்புள்ளை நீர் விநியோகச் செயற்திட்டம் | 48 |
| 14 | ருஹுனுபுர நீர் விநியோகச் செயற்திட்டம் | 57 |
| 15 | கொலொன்னை - பலாங்கொடை நீர் விநியோகச் செயற்திட்டம் | 31 |
| 16 | வடக்கு துரித புனரமைப்புச் செயற்திட்டம் | 23 |
| 17 | முன்னுரிமை வீதிப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுச் செயற்திட்டம் கட்டம் I | 170 |
| 18 | வட மாகாண தேசிய வீதி வலையமைப்பு மேம்பாடு | 204 |
| 19 | முன்னுரிமை வீதிப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுச் செயற்திட்டம் கட்டம் II | 223 |
| 20 | வீதித் துறை ஒத்துழைப்புச் செயற்திட்டம் | 52 |
| 21 | தேசிய வீதித் துறைச் செயற்திட்டம் | 13 |
| 22 | கொழும்பு வெளிச்சுற்றுவட்ட அதிவேகப் பாதை - கடவத்தை முதல் கடுவலை வரை | 34 |
| 23 | சவுதி நிதி உதவிக்காக இனங்காணப்பட்ட வீதிகளைப் புனரமைப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான செயற்திட்டம் | 11 |
| 24 | உருக்குப் பாலம் அமைக்கு செயற்திட்டம் கட்டம் II - வியாங்கொடை மேம்பாலம் | 26 |
| 25 | துரித இயற்கை அனர்த்த புனரமைப்புச் செயற்திட்டம் | 07 |
| 26 | வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - மேலதிக நிதியிட்டம் | 22 |
| 27 | 46 பாலங்களைப் புனரமைக்கும் செயற்திட்டம் | 24 |
| | **மொத்தம்** | **1611** |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2.4 மாகாண சபை பதவியணி மீளாய்வு

மாகாண சபைகளால் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அவசியமான பதவியணியினை இனங்காணும் நோக்கில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2012 ஆம் ஆண்டில் பதவியணி மீளாய்வினை மேற்கொண்டது. இதன் போது ஒவ்வொரு நிறுவனத்தினதும் வேலைப் பரப்பு, செயற்பாடு, ஒவ்வொரு பதவிக்குமுரிய தகைமைகள், ஆட்சேர்ப்பு நடைமுறைகள், சம்பளத் திட்டங்கள், பதவிப்பெயர்கள், வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ஆகிய விடயங்கள் தொடர்பில் முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட்டது.

அட்டவணை இல 06 - மாகாண சபைகளுக்கான அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை

| **மாகாண சபை** | **வெற்றி** | மாவட்டங்களின் எண்ணிக்கை | திருத்தப்பட்ட பதவி எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேல் | 58,21,710. | 3 | 81,844 |
| மத்திய | 25,58,716 | 3 | 50,326 |
| வடமேல் | 23,70,075 | 2 | 47,059 |
| தென் | 24,64,732 | 3 | 46,445 |
| கிழக்கு | 15,51,381 | 3 | 33,871 |
| சப்ரகமுவ | 19,18,880 | 2 | 33,691 |
| வட | 10,58,762 | 5 | 32,051 |
| ஊவா | 12,59,900 | 2 | 31,195 |
| வட மத்திய | 12,59,567 | 2 | 29,080 |
| **இறுதி மொத்தம்** | **2,02,63,723** | **25** | **3,85,562** |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

அரசிலயமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் 1987 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மாகாண சபை முறைமையின் ஊடாக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் பொது மக்களுக்கு நெருக்கமாக்கமான முறையில் வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும், 1987 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் நிறுவனங்களுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அவசியமான சிறந்த பதவியணியை இனங்காண்பதற்கான ஒழுங்கான முறையொன்று காணப்படவில்லை. அதனால், உள்ளூராட்சி நிறுவனங்களில் அனுமதி வழங்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை, சேவைத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. சில நிறுவனங்களுக்கு மேலதிக பதவியணிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த அதேவேளை சில நிறுவனங்களுக்கு தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவு பதவியணிக்கு அனுமதி

வழங்கப்பட்டிருக்கவில்லை மேலும் பதவிப் பெயர்களுக்கும் சம்பளப் படிமுறைகளுக்கும் இடையே பல்வேறு முரண்பாடுகள் காணப்பட்டதுடன், அனுமதியளிக்கப்பட்ட பதவிகள் இல்லாது மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்களும் காணப்பட்டன. அதனால், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் முறையான பதவியணி மீளாய்வு ஒன்றை மேற்கொள்வது காலத்தின் தேவையான உணரப்பட்டது.

அதற்கிணங்க, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, தேசிய சம்பள மற்றும் ஊழியர் தொகை ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு என்பவற்றின் பங்கேற்புடன் 2012 ஆம் ஆண்டில் நடாத்திய மாகாண சபைகளுக்கான பதவியணி தொடர்பில் மீளாய்வில் அனைத்து மாகாணங்களினதும் பிரதம செயலாளர்களும் அனைத்து நிறுவனங்களினதும் தலைவர்களும் பங்கேற்றனர். ஒவ்வொரு நிறுவனத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகக்கடமைகள், அதற்கு அவசியமான சிறந்த பதவியணி, உரிய சரியான சம்பளத் திட்டங்கள், சரியான பதவிப் பெயர்கள் என்பன உள்ளடங்கியதாக இம்மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் இம்மீளாய்வின் பின்னர் அனுமதி வழங்கப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் தரமுயர்வு நடைமுறைகளைத் தயாரிக்கும் போது முறையான அனுமதியைப் பெற வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. இவை தவிர, மாகாண சபைகளால் பட்டயங்களை நிறைவேற்றுவதன் முலம் நிறுவப்பட்டிருந்த நிறுவனங்களில் அதிகமானவற்று அனுமதிக்கப்பட்ட பதவியணி தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவற்றுக்கு 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இணங்க அனுமதிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டங்களும் காணப்படவில்லை. இப்பதவியணிகளை மீளாய்வு செய்கின்ற போது அத்தகைய நிறுவனங்களுக்கும் அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்குப் பொருத்தமான பதவியணிக்கும் சம்பளப் படிமுறைகளுக்கும் அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2012 மாகாண சபை பதவியணி மீளாய்வின் கீழ் மாகாண சுகாதாரத் திணைக்களங்கள் மற்றும் மாகாண ஆயுர்வேதத் திணைக்கங்கள் என்பவற்றின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் ஏனைய நிறுவனங்களுக்குமான பதவியணிகளை அவ்வைத்தியசாலைகளினதும் நிறுவன மட்டத்திலும் இனங்கண்டு அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை விசேடமாகக் குறிப்பிட வேண்டிய ஒரு அம்சமாகும். மேலுமச் மாகாண சமூக சேவைகள் திணைக்களங்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களங்கள் என்பவற்றின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களுக்க அந்நிறுவனங்களின் மட்டத்தில் அவசியமான பதவியணிகளுக்கு அனுமதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் மாகாண கல்வித் திணைக்களங்களின் கீழ் காணப்படுகின்ற பாடசாலைகளுக்கு அவசியமான சிறந்த பதவியணிகளுக்கு அப்பாடசாலைகளின் மட்டத்தில் அனுமதி வழங்கும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வாறு கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளுக்கு நிறுவன மட்டத்தில் பதவியணியைத் தீர்மானித்து அனுமதி வழங்குவதன் ஊடாக அந்த அடிப்படைத் தேவைகளை நகரங்களுக்கு அப்பால் தூரப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு சிரமங்களின்றிப் பெற்றுக் கொள்ளும் உரிமை உறுதிப்படுத்தப்படும்.

## 3. சம்பள மற்றும் ஊதிய முகாமை

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களில் அரசாங்க சேவையின் சம்பளங்கள், ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், ஊக்குவிப்புத் திட்ட மற்றும் ஏனைய ஊதியங்கள் தொடர்பான முகாமைத்துவமும் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. இச்செயற்பாட்டின் போது தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழு, அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு என்பவற்றின் அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் கவனத்தில் எடுத்து தீர்மானங்களை வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. சம்பளங்கள், ஊதியங்கள் தொடர்பான நடைமுறைச் சிக்கல்கள் எழும் சந்தர்ப்பங்களில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் விளக்கம் கோரப்படும் சந்தர்ப்பங்களில் அவசியமான அறிவுறுத்தல்களை வழங்கும் பணியும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டின் 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கும் அதற்கான திருத்தங்களுக்கும் இணங்கிய வகையில் நியதிச் சட்ட நிறுவனங்களின் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகளுக்கும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளைத் தீர்மானிக்கும் செயற்பாட்டுக்கும் திணைக்களம் பங்களிப்பு வழங்கியுள்ளது. இச்செயற்பாடுகளுடன் தொடர்புடைய வகையில் 2007 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் பின்வரும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டன.

அட்டவணை - 07 முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைகள் - 2012

| சுற்றறிக்கை இலக்கமும் திகதியும் | **விடயம்** |
|---|---|
| முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை<br>இல 45(1) – 2012.10.10 | 2011 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க ஆய்வுக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் |
| முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை<br>இல 48 – 2012.12.10 | 2013 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க அரச கூட்டுத்தாபனங்கள் ,நியதிச் சட்டசபைகள் மற்றும் செயற்திட்ட பதவியணியினர் ஆகியோருக்கான கொடுப்பனவுகளைத் திருத்துதல் |
| முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை<br>இல 49 – 2012.12.24 | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளின் பதவியணியினருக்கான 2012 ஆம் ஆண்டுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

# 4. ஆய்வுச் செயற்பாடுகள், தகவல் மற்றும் தரவுத் தொகுதி

## 4.1 ஆய்வுச் செயற்பாடுகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிக்கடமைகளில் அரச துறை ஊழியர் எண்ணிக்கையுடன் தொடர்புடைய மறுசீரமைப்புக்களை அறிமுகம் செய்தல், அரச நிறுவமனங்களை மீள்கட்டமைத்தல், சிறந்த பதவியணியைப் பேணி வருதல், அரச துறை பதவியணி தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவீடுகளையும் தரநியமங்களையும் உருவாக்குதல், சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வேதனங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் முன்வைத்தலும் தீர்வுகளை வழங்குதலும், சமகால அபிவிருத்தித் தேவைகளுக்குப் பொருத்தமான விதத்தில் அரச துறையின் பல்வேறு சேவைகளுக்கான சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் சேவை நிபந்தனைகளையும் மீளாய்வு செய்யும் போது அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் முன்வைத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் திணைக்களம் ஏனைய நிறுவனங்களுடன் நெருக்கமான முறையில் செயற்பட வேண்டி ஏற்படுகின்றது.
இச்செயற்பாடுகளைத் தாமதமின்றி, சரியான முறையில் மேற்கொள்வதற்குத் திணைக்களத்திடம் வினைத்திறன்மிக்க ஆய்வுப் பிரிவு ஒன்று காணப்படுவது அத்தியவசியமானதாகும். திணைக்களத்தின் பணிக்கடமைகளைப் பயனுறுதிவாய்ந்த முறையில் மேற்கொள்வதற்கு அவசியமான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காகத் தகவல்களைச் சேகரித்தல், அத்தகவல்களைப் பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தல் என்பன ஆய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்புக்களாகும். இதற்குத் தேவையான புலன்விசாரணைகளை/ ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஆய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் உரிய நிறுவனங்களுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்டு தகவல் சேகரிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக திணைக்களத்தின் ஆய்வுப் பிரிவின் கொள்ளளவை விரிவாக்க வேண்டியதன் அவசியம் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்காகத் திறமையான உத்தியோகத்தர்களை அடையாளம் கண்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4.2 தகவல் மற்றும் தரவுத் தொகுதி

அரசாங்கத் துறையின் மனித வளங்கள் தொடர்பான சரியான தரவு மற்றும் தகவல் தொகுதியொன்றைப் பேணி வருவது, கொள்கைத் தீர்மானங்களை எடுக்கும் போது அதி முக்கியத்துவம் பெறுகின்றது. அரச துறை பதவியணி மற்றும் சம்பள முகாமை மற்றும் ஆலோசனை தொடர்பான முன்னணி அரச நிறுவனம் என்ற வகையில் முகாமைத்து சேவைகள் திணைக்களத்திடம் அதிக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க, பயனுறுதிமிக்கதும் முறையானதுமான கணனித் தரவுத் தொகுதியொன்றின் தேவையைச் சரியான முறையில் இனங்கண்டு 2011 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பிரிவுடன் இணைந்து அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச்சட்டச் சபைகள் மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் மனித வளம் தொடர்பான தகவல்கள்

அடங்கிய தரவுத் தொகுதியொன்றை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் அச்செயற்பாடுகளில் கணிசமான பகுதி பூர்த்தி செய்யப்பட்டது.

அரசாங்கத் துறையின் மனித வளங்கள் தொடர்பான சரியான புள்ளிவிபரவியல் தகவல்களை இத்தரவுத் தளத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அதற்கிணங்க, சம்பளங்கள், சேவைகள், வகுதிகள் போன்ற பதவியணி வகைப்படுத்தல்கள் தொடர்பாகச் செய்யப்படும் சரியான தகவல் அறிக்கைகளைத் தேவையான சந்தர்ப்பங்களில் இத்தரவுத் தளத்திலிருந்து இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிகள் பாரியளவில் இலகுபடுத்தப்பட்டுள்ளதுடன் வழங்கப்படும் தரவுகளின் அச்சொட்டான தன்மையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இத்தரவுத் தொகுதியில் அடங்கியுள்ள தகவல்களை இற்றைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தரவுத் தொகுதியின் வினைத்திறனை மேலும் விருத்தி செய்வதற்கும் அரச துறையின் அனைத்து நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அதன் செயற்பாடுகளை 2013 ஆம் ஆண்டில் விரிவுபடுத்துவதற்கும் திட்டமிடப்படடுள்ளது. 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை ஆகிய வகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ள அரச துறைப் பதவியணிகளை அக்கணனித் தரவுத் தொகுதியின் ஊடாகப் பெறப்பட்ட தகவல்கள் அட்டவணை இல 08 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இல - 08 சேவை மட்டங்களின் அடிப்படையில் அரச துறை பதவியணி

| **நிர்வாக மட்டம்** | **ஊழியர் மட்டம்** | | | | **தற்போதைய பதவியணி** |
|---|---|---|---|---|---|
| | **சிரேஷ்ட** | **மூன்றாம் நிலை** | **இரண்டாம் நிலை** | **ஆரம்பநிலை** | |
| தேசிய | 35,771 | 35,771 | 6,41,574 | 187,800 | 900916 |
| மாகாண | 13.675 | 15,632 | 239,553 | 60792 | 329,652 |
| உள்ளூராட்சி நிறுவனங்கள் | 996 | 734 | 15,606 | 31,945 | 49,281 |
| **மொத்தம்** | **50,442** | **52,137** | **8,96,733** | **2,80,537** | **12,79,849** |

எண்ணிக்கை - 2012/12/31 இல் உள்ளாறு

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

4.3 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைத்தல்.

அரசாங்கத் துறையின் தாபனச் செயற்பாடுகள், சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் போன்ற திணைக்களத்தின் விடயப்பரப்பில் அடங்கும் விடயங்கள் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை வழங்குவது இத்திணைக்களத்தின் பிரதான பணிக் கடமைகளில் ஒன்றாகும். 2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள், அவை உள்ளடங்கும் துறைகள் தொடர்பான தகவல்கள் அட்டவணை இல 09 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இல - 09 அமைச்சரவை விஞ்ஞாபன அவதானங்களின் வகைப்படுத்தல்

| தொடர் இலக்கம் | விடயம்/துறை | அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பதவிகளுக்கு நியமித்தல் | 78 |
| 02 | சேவையை நீடித்தல் | 76 |
| 03 | புதிய பதவிகளை உருவாக்குதல் | 38 |
| 04 | வேதனங்கள் | 46 |
| 05 | சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் | 39 |
| 06 | ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் | 13 |
| 07 | ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு | 27 |
| 08 | ஏனையவை | 82 |
| **மொத்தம்** | | **399** |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் வழங்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களில், பதவிகளுக்கான நியமனங்கள், சேவையை நீடித்தல், வேதனங்கள் என்பன தொடர்பான விடயங்கள் முக்கியமானவையாகக் காணப்பட்டன. அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்களை வழங்கியதற்கு மேலதிகமாக தினசரி நடைபெறும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பான அமைச்சரவை உபகுழுக் கூட்டங்களிலும் திணைக்களம் பங்கேற்றது. 2003 முதல் 2012 வரையான காலப் பகுதியில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் அட்டவணை இல 10 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இல - 10 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு முன்வைக்கப்பட்ட அவதானிப்புக்கள் 2003 -2012

| வருடம் | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை | 863 | 562 | 605 | 820 | 780 | 750 | 1272 | 598 | 1019 | 399 |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

4.4 குழுக்களுக்கான பிரதிநிதித்துவம், ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள், தொடர்பாடல்

அபிவிருத்திக் குறிக்கோள்களையும் நிறுவனக் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் செயற்பாட்டின் போது பின்வரும் மாநாடுகளிலும் கலந்துரையாடல்களிலும் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நிதி, திட்டமிடல் அமைச்சையும் திறைசேரியின் செயலாளரையும் பிரதிநிதித்துவம் செய்து செயலூக்கத்துடன் பங்களிப்புச் செய்தனர்.

- தாபனச் செயற்பாடுகள் தொடர்பான அமைச்சரவை உபகுழு
- அமைச்சரவையினால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் அடங்கலாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் குழு
- பொதுக் கணக்குகள் குழு (COPA)
- மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபார் மாநாடு
- ஆளுநர் மாநாடு
- மாகாண முதலமைச்சர்கள் மாநாடு
- மாகாண முதன்மைச் செயலாளர்கள் மாநாடு
- தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் கலந்துரையாடல்கள்
- செயற்திட்ட முன்னேற்ற மீளாய்வுக் குழுக்கள்
- பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக்கள்
- பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்

மேலும், பல்வேறு நிறுனவனங்களின் கோரிக்கைக்கு இணங்க நேர்முகப் பரீட்சைச் சபைகளுக்கான அங்கத்தவர்களாகவும் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். மேலும், அரசாங்க நிறுவனங்களின் பதவியணி முரண்பாடுகள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுடன் அடிக்கடி பேச்வார்த்தைகள் நடைபெறுகின்றன. இவ்வாறு, அரச துறையின் வினைத்திறன்மிக்க மனித வள முகாமைத்துவத்திற்கான நடைமுறையொன்றை உருவாக்கும் நோக்கில் பயனுறுதிமிக்க தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு இத்திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## 5. தாபனப் பிரிவு

திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதி மிக்க முறையிலும் மேற்கோள்வதில் திணைக்கள உத்தியோகத்தர்களின் தொழிற்திருப்தியை உயர்ந்த மட்டத்தில் பேணி வருவது மிகவும் முக்கியமானதாகும். திணைக்களத்தின் பௌதிகச் சூழலை, தொழிற் திருப்தியை மேம்படுத்தக்கூடிய நட்புறவான அலுவலகச் சூழலாக மாற்றியமைப்பதற்கும் பயனுறுதிமிக்க ஒரு குழுவாகச் செயற்படுவதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் தாபனப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட பதவியணி 77 ஆகக் காணப்பட்ட அதேவேளை அவற்றில் 23 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. இந்த 23 பதவில் 11 பதவிகள் சிரேஷ்ட மட்டத்திலான (மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பதவி 01, பணிப்பாளர் பதவிகள் 03, உதவிப் பணிப்பாளர் பதவிகள் 06 மற்றும் கணக்காளர் பதவி 01) பதவிகளாக உள்ளன. திணைக்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளுக்கு இணங்க தேவையான பதவியணி 2013 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

எவ்வாறாயினும் 2012 ஆம் ஆண்டில் திணைக்களத்திடமிருந்த மனித மற்றும் பௌதிக வளங்களை உச்ச அளவில் வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதிமிக்க முறையிலும் பயன்படுத்தியதன் மூலம் திணைக்களத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் சேவைகளைத் தடங்கலின்றி மேற்கொள்ள முடிந்தது. 2012.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான முழு ஊழியர் குழாத்தினதும் தகவல்கள் அட்டவணை இல. 11 மூலம் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இல - 11 ஊழியர் குழாம் பற்றிய தகவல்கள் 2012.12.31 இல் உள்ளவாறு

| தொடர் இலக்கம் | **பதவி** | அனுமதிவழங்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதைய எண்ணிக்கை | **வெற்றிடங்கள்** |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | 00 |
| 02 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 02 | 01 | 01 |
| 03 | பணிப்பாளர் | 07 | 04 | 03 |
| 04 | பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் | 10 | 05 | 05 |
| 05 | கணக்காளர் | 01 | 00 | 01 |
| 06 | உதவிப் பணிப்பாளர் ( த. தொ. தொ.) | 01 | 00 | 01 |
| 07 | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 08 | மொழிபெயர்ப்பாளர் | 01 | 01 | 00 |
| 09 | ஆராய்ச்சி உதவியாளர் | 07 | 07 | 00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 | 00 |
| 11 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 29 | 23 | 06 |
| 12 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 03 | 01 | 02 |
| 13 | சாரதி | 06 | 03 | 03 |
| 14 | அலுவலக உதவியாளர் | 07 | 06 | 01 |
| | **மொத்தம்** | **77** | **5**4 | **23** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2012.12.31 இல் திணைக்களதில் சேவையில் இருந்த பதவியணியினர் பற்றிய தகவல்கள் பட்டியல் இல 01 இல் தரப்பட்டுள்ளன.

பட்டியல் - 01 பதவியணி 2012.12.31 இல் உள்ளவாறானது

| தொடர் இலக்கம் | **பெயர்** | **பதவி** |
|---|---|---|
| 01 | திருமதி என். கொடகந்த | பணிப்பாளர் நாயகம் |
| 02 | திரு. ஏ.எம் அசங்க தயாரத்ன | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| 03 | திரு.ஜீ.டி அநுர பியபந்து | பணிப்பாளர் |
| 04 | திரு.எஸ்.ஆர்.டபிள்யு.எம்.ஆர்.பீ சத்குமார | பணிப்பாளர் |
| 05 | திரு.கே.ஜீ.பிரதீப் புஷ்பகுமார | பணிப்பாளர் |
| 06 | திருமதி ஆர்.கே.ஜீ.டி.கே விஜேசிங்ஹ | பணிப்பாளர் |
| 07 | திருமதி எம்.கே.எஸ். ஜயசேன | உதவிப் பணிப்பாளர் |
| 08 | திருமதி எஸ்.என். அத்தநாயக | உதவிப் பணிப்பாளர் |
| 09 | திரு.எம்.ஏ கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 10 | திரு.டபிள்யு.எச்.ஜீ. கோசல | உதவிப் பணிப்பாளர் |
| 11 | செல்வி டபிள்யு.பீ. செவ்வந்தி | உதவிப் பணிப்பாளர் |
| 12 | திருமதி ஏ. ஆர்.பீ. தயானி ராஜபக்ஷ | நிர்வாக உத்தியோகத்தர் |
| 13 | திருமதி பீ.டி.டி. சமரசேகர | மொழிபெயர்ப்பாளர் |
| 14 | திரு.எம்.டபிள்யு. ஜயந்த | ஆராய்ச்சி உதவியாளர் |
| 15 | திரு. ஆர்.கே.ஏ. கிரிஷாந்த | ஆராய்ச்சி உதவியாளர் |
| 16 | திரு. கே.ஆர் பரணவிதான | ஆராய்ச்சி உதவியாளர் |
| 17 | திரு. எஸ்.எம்.டி. சமரவீர | ஆராய்ச்சி உதவியாளர் |

| | | |
|---|---|---|
| 18 | திருமதி எம்.எம்.ஏ.என். மல்போறு | ஆராய்ச்சி உதவியாளர் |
| 19 | திருமதி ஏ.கே.பீ. நில்மினி | ஆராய்ச்சி உதவியாளர் |
| 20 | திரு.பி.எம் சரத் | ஆராய்ச்சி உதவியாளர் |
| 21 | திரு எம்.பீ.எஸ். சல்காது | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் |
| 22 | திரு.ஏ.ஆர் சஹிடீன் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 23 | திரு. டபிள்யு.எஸ்.எஸ்.பீ பெர்னாண்டொ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 24 | செல்வி டபிள்யு.ஏ.ஆர். விஜேசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 25 | திருமதி எச்.யூ.என். பொன்சேகா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 26 | திருமதி டபிள்யு.ரீ.எம். பிரியந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 27 | திருமதி ஜே.ஏ.என் தேதுனு | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 28 | திருமதி ஏ.எம்.எம். ஷியாமலி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 29 | திரு.டபிள்யு.எஸ்.கே மாகம்மன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 30 | திருமதி வை.என். களுஆரச்சி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 31 | திருமதி கே.பீ பத்மகாந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 32 | திருமதி எஸ்.எச்.எஸ். பவித்ரா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 33 | திருமதி எம்.எம். அளுத்கே | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 34 | திருமதி எம்.டி.ஆர் ரஞ்சனீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 35 | செல்வி கே.ரீ.பீ. ரன்சிமாலி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 36 | செல்வி ஜீ.என்.எச். அபயவர்தன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 37 | திரு எம்.என்.எம். உஸாமா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 38 | செல்வி.கே.ஐ. பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 39 | திருமதி கே.எஸ்.எஸ்.ஆர் செனெவிரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 40 | செல்வி எச்.எல். மங்கலிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 41 | பிரியந்த சதரசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 42 | திருமதி.ஜீ.ஜீ.என்.எஸ் ராஜபக்ஷ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 43 | தயானி டயஸ் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 44 | செல்வி எஸ்.ஏ.ஜீ.டி.என். ஜயகொடி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 45 | செல்வி ஹிரன்தி தீகல | தகவல் தொடர்பாடல் உதவியாளர் |
| 46 | திரு.எம்.கே. யஸவர்தன | சாரதி |
| 47 | திரு.ஆர்.சீ. கருணாரத்ன | சாரதி |
| 48 | திரு.ஷாம் நிஷாந்த | சாரதி |
| 49 | திரு.டபிள்யு.ஏ.ஹேமசிரி | அலுவலக உதவியாளர் |
| 50 | திரு. ஜீ.எஸ்.ஆர். ஏகநாயக | அலுவலக உதவியாளர் |
| 51 | திரு.ரீ.ஜீ. ஆனந்த | அலுவலக உதவியாளர் |
| 52 | திரு.ஏ.என்.சீ. டி அல்விஸ் | அலுவலக உதவியாளர் |
| 53 | திரு.டபிள்யு. நந்தன | அலுவலக உதவியாளர் |
| 54 | திரு. சுசந்த பிரபாத் | அலுவலக உதவியாளர் |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

5.1 வயதுப் பிரிவின் அடிப்படையில் பதவியணியின் வகைப்படுத்தல்

**அட்டவணை இல - 12 வயதுப் பிரிவின் அடிப்படையில் பதவியணியின் வகைப்படுத்தல்**

| தொடர் இலக்கம் | வயதுப் பிரிவு | உத்தியோகத்தர் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | 20-30 | 04 |
| 02 | 31-40 | 20 |
| 03 | 41-50 | 20 |
| 04 | 51-60 | 10 |
| மொத்தம் | | **5**4 |

மூலம்: முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

5. 2 இடமாற்றங்கள்

அரசாங்க சேவையின் பொதுவான நடைமுறைகளுக்கு இணங்க திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க, 2012 ஆம் ஆண்டில் திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற / வேறு பதவிகளுக்கு நியமனம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 31 ஆகும்.

பட்டியல் - 02 2012 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை

| தொடர் இலக்கம் | **பெயர்** | **பதவி** | இடமாற்றம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. ஏ.கே.என். விக்ரமசிங்ஹ | பணிப்பாளர் | 2012.01.02 |
| 02 | திரு.டபிள்யு.எம்.சீ.பீ. மொஹொட்டிகெதர | உதவிப் பணிப்பாளர் | 2012.01.02 |
| 03 | திரு.டி விஜேசிரிவர்தன | உதவிப் பணிப்பாளர் | 20102-07-2015 |
| 04 | திருமதி டி.எச். கலன்சூரிய | கணக்காளர் | 2012.09.17 |
| 05 | திருமதி ஜீ.ரீ.எம். பொன்சேகா | உதவிப் பணிப்பாளர் ( த. தொ. தொ) | 20102-09-2012 |
| 06 | திருமதி என்.என் ரணசிங்ஹ | நிர்வாக உத்தியோகத்தர் | 2012.06.24 |
| 07 | திருமதி ஆர்.எஸ். கொடிகார | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.01.02 |
| 08 | திருமதி கே.பீ ஹேவாகம | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.01.02 |
| 09 | திரு.எம்.ஏ.எஸ் கலும் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.01.02 |
| 10 | திருமதி.எல்.ஏ.எஸ் சில்வா | அரச முகாமைத்துவ | 2012.01.10 |

| | | | |
|---|---|---|---|
| | | உதவியாளர் | |
| 11 | திருமதி டபிள்யு.ஆர்.எம் பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.04.03 |
| 12 | செல்வி டபிள்யு.கே.ஏ. டி சில்வா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.04.04 |
| 13 | திருமதி கே.ஏ.டி.எஸ் வசந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.06.24 |
| 14 | திருமதி டபிள்யு.ஏ பியசீலி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.07.02 |
| 15 | திருமதி டி.எம். எஸ் மல்காந்தி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.09.17 |
| 16 | திரு. பீ.ஏ இந்திக | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.12.20 |
| 17 | திருமதி ஜே.கே.டி.எம் திலகரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.12.17 |
| 18 | திருமதி.பீ.ஜீ.என் லக்மினீ | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 2012.01.26 |
| 19 | திருமதி. ஜே விதானபதிரண | சாரதி | 2012.01.02 |
| 20 | திரு. ஜே.ஏ.டி. விமல் குமார | சாரதி | 2012.03.02 |
| 21 | திரு. டபிள்யு.எம். எஸ் ஜகத் குமார | சாரதி | 2012.04.09 |
| 22 | திரு.கே.டபிள்யு. ஞானவிமல் | சாரதி | 2012.04.23 |
| 23 | திரு லக்ஷ்மன் நாபெவிதான | சாரதி | 2012.05.07 |
| 24 | திரு.எம்.ஏ.எச். இனாமுல் ஹஸன் | சாரதி | 2012.07.15 |
| 25 | திரு.ஏ.ஏ.எஸ்.பீ. அமரசிங்ஹ | சாரதி | 2012.12.07 |
| 26 | திரு. டி.எம். எஸ் பெரேரா | அலுவலக உதவியாளர் | 2012.01.02 |
| 27 | திரு கே.டி. சுனில் தயாரத்ன | அலுவலக உதவியாளர் | 2012.05.01 |
| 28 | திருமதி எஸ்.என்.ஜே. ஆனந்த டி சில்வா | அலுவலக உதவியாளர் | 2012.08.16 |
| 29 | திரு.ஏ.ஜீ. வசந்தசிரி | அலுவலக உதவியாளர் | 2012.03.26 |

மூலம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

பட்டியல் - 03 வேறு பதவிகளுக்கு நியமனம் பெற்ற அலுவலர்கள்

| தொடர் இலக்கம் | **பெயர்** | **பதவி** | நியமனம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திருமதி ஆர்.பீ.டி. ராஜபக்ஷ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.09.27 |
| 02 | திரு.ஏ.டபிள்யு.ஏ. கொடகம | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.10.03 |

2012 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று திணைக்களத்துக்கு வந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 22 ஆகும் அவர்கள் பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவத்தைக் கொண்டவர்களாவர்.

பட்டியல் - 04 2012 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று வந்த அலுவலர்கள்

| தொடர் இலக்கம் | **பெயர்** | **பதவி** | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| 01 | திரு.ஜீ.டி அநுர பியபந்து | பணிப்பாளர் | 2012.01.03 |
| 02 | திருமதி ஆர்.கே.ஜீ.டி.கே விஜேசிங்ஹ | பணிப்பாளர் | 2012.01.03 |
| 03 | செல்வி டபிள்யு.பீ. செவ்வந்தி | உதவிப் பணிப்பாளர் | 2012.01.02 |
| 04 | திருமதி ஏ.ஆர்.பீ.டி. ராஜபக்ஷ | நிர்வாக உத்தியோகத்தர் | 2012.10.01 |
| 05 | திரு.பி.எம் சரத் | ஆராய்ச்சி உதவியாளர் | 2012.02.03 |
| 06 | செல்வி.கே.ஐ. பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.01.04 |
| 07 | திருமதி ஏ.ஆர்.பீ.டி. ராஜபக்ஷ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.01.04 |
| 08 | திருமதி கே.எஸ்.எஸ்.ஆர் செனெவிரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.01.04 |
| 09 | திருமதி டபிள்யு.ஏ பியசீலி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.01.05 |
| 10 | செல்வி எச்.எல் மல்லிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.02.27 |
| 11 | திருமதி.ஜீ.ஜீ.என்.எஸ் ராஜபக்ஷ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.04.04 |
| 12 | திருமதி.டபிள்யு.ஜீ.ஜீ.ஏ.டி.எம். டயஸ் | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.04.16 |
| 13 | திரு.எஸ்.ஏ.டபிள்யு.பீ. சதரசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.06.01 |
| 14 | செல்வி எஸ்.ஏ.ஜீ.டி.என். ஜயகொடி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2012.11.01 |
| 15 | செல்வி ஹிரந்தி தீகல | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 2012.01.23 |
| 16 | திரு. டபிள்யு.எம். சீ ஜகத் குமார | சாரதி | 2012.01.02 |
| 17 | திரு.கே.டபிள்யு. ஞானவிமல் | சாரதி | 2012.04.03 |
| 18 | ஏ.ஏ.எஸ்.எல்.பீ அமரசிங்ஹ | சாரதி | 2012.05.09 |
| 19 | திரு.ஏ.என்.சீ. டி அல்விஸ் | அலுவலக உதவியாளர் | 2012.01.03 |

| | | | |
|---|---|---|---|
| 20 | திரு.டபிள்யு. நந்தன | அலுவலக உதவியாளர் | 2012.01.23 |
| 21 | திரு.கே.டி.கே.எஸ். தயாரத்ன | அலுவலக உதவியாளர் | 2012.03.21 |
| 22 | திரு.ஏ.ஈ. சுசந்த பிரபாத் | அலுவலக உதவியாளர் | 2012.04.19 |

மூலம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.3 பயிற்சி நிகழ்ச்சிகள்

### 5.3.1 உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

திணைக்கள உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சிகளைத் திட்டமிட்ட அடிப்படையில் நடாத்தும் நோக்கில் திணைக்களத்திற்காக வருடாந்த பயிற்சித் திட்டமொன்று தயாரிக்கப்படும். இந்த வருடாந்த பயிற்சித் திட்டத்தைத் தயாரிக்கும் போது திணைக்கள உத்தியோகத்தர்களின் தேவைகளும் திணைக்களத்திடம் ஒப்படைக்கபட்டுள்ள பொறுப்புக்களும் கவனத்தில் எடுக்கப்படும். அதனடிப்படையில், 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிற்சிகள் அட்டவணை 13 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இல - 13 பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்

| தொடர் இலக்கம் | **துறை** | பயிற்சி நிறுவனம் | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | பயிற்சிநெறி | தேசிய ஊழிய கற்கைகள் நிறுவனம் | 01 |
| 02 | முகாமைத்துவப் பயிற்சி | கொதலாவலை பாதுகாப்புக் கல்விக் கல்லூரி | 01 |
| 03 | தாபனச் செயற்பாடுகள் | அரசாங்க சேவை பயிற்சி நிறுவனம் | 07 |
| 04 | கணனிப் பயிற்சி | மிலோதா நிறுவனம் | 05 |
| **மொத்தம்** | | | **14** |

### 5.3.2 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி அவர்களின் அனுபவத்தையும் விடய அறிவையும் வளர்த்துக் கொள்வதற்காக 2012 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனடிப்படையில் 03 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் கிட்டின.

அட்டவணை - 05 வெளிநாட்டுப் பயிற்சி - 2012

| **தொடர் இலக்கம்** | **பெயர்** | **பதவி** | **கிடைத்த பயிற்சி** | **நாடு** | **காலம்** |
|---|---|---|---|---|---|
| 01 | திரு. எம்.ஏ கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் | பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மாநாடு | சீனா | 2012.07.25 - 2012.08.17 |
| 02 | திரு. டபிள்யு.எச்.ஜீ. கயான் கோஷல | உதவிப் பணிப்பாளர் | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான வெளிநாட்டுத் தேர்ச்சி அறிமுகம் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மாநாடு | சீனா | 2012.10.14 - 2012.11.06 |
| 03 | திரு. எஸ்.ஆர்.டபிள்யு.எம்.ஆர்.பீ. சத்குமார | பணிப்பாளர் | அபிவிருத்தி அடைந்து வரும் தீவு நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மாநாடு | சீனா | 2012.11.07 - 2012.11.30 |

5.4 வருடாந்த தபால்

2011 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு கிடைத்த மொத்தக் கடிதங்களின் எண்ணிக்கை 7114 ஆகும். இக்கடிதங்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றவையாக இருந்த அதேவேளை அரச நிறுவனங்களுக்குப் புதிய பதவிகளை உருவாக்குதல், வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் திணைக்களத்திடம் அனுமதி கோருதல், பதவியணி ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் கோரல், விளக்கங்கள் கோருதல், பொது நிர்வாகம் ஆகிய அவற்றில் முக்கியமாக இடம்பெற்றிருந்தன.

அட்டவணை இல - 14 2012 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை

| தொடர் இலக்கம் | **மாதம்** | கடிதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | ஜனவரி | 558. |
| 02 | பெப்ரவரி | 299 |
| 03 | மார்ச் | 516 |
| 04 | ஏப்ரல் | 527 |
| 05 | மே | 516 |
| 06 | ஜூன் | 699 |
| 07 | ஜூலை | 729 |
| 08 | ஆகஸ்ட் | 835 |
| 09 | செப்டெம்பர் | 610 |
| 10 | ஒக்டோபர் | 769 |
| 11 | நவம்பர் | 527 |
| 12 | டிசம்பர் | 529 |
| | **மொத்தம்** | **7114.** |

மூலம்: **முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்**

## 6. நிதிப் பிரிவு

2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் மனித வள முகாமைச் செயற்திட்டத்திற்காக செலவுத் தலைப்பு 242 இன் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு ரூபா. 34,250,000/- ஆகக் காணப்பட்ட அதேவேளை உண்மையாக ஏற்பட்ட செலவுகள் ரூபா 31,857,723/- ஆக அமைந்தது. அதனடிப்படையில் நோக்குகையில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 93 சதவீதத்தின் மூலம் திணைக்களத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து சிக்கனமான முறையில் செலவுகளை மேற்கொள்ள முடிந்தது. நிதி முன்னேற்ற அறிக்கை வருமாறு.

அட்டவணை இல - 15 நிதி முன்னேற்ற அறிக்கை


| செலவு விபரம் | | 2011 | | | 2012 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அனுமதிக்கப்பட்ட மானியம் (முடக்கி வைக்கப்பட்ட மானியங்களைத் தவிர) (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) | செலவின சதவீதம் % | அனுமதிக்கப்பட்ட மானியம் (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) | **செலவினம் சதவீதம் (%)** |
| **மீளெழும் செலவுகள்** | | **3,12,67,000.00.** | **3,08,84,182.91** | **99** | **3,28,00,000.00** | **3,09,95,444.50** | **94** |
| **தனிப்பட்ட வேதனாதிகள்** | | **2,27,68,000.00** | **2,25,44,885.95** | **99** | **2,37,60,000.00** | **2,29,31,076.91** | **97** |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 1,64,00,000.00 | 1,62,05,457.32 | 99 | 1,61,50,000.00 | 1,53,58,040.70 | 95 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் காலச் சம்பளம் | 810,000.00 | 7,92,082.60 | 98 | 715,000.00 | 693,128.46 | 97 |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 5,558,000.00 | 55,47,346.03 | 99 | 68,95,000.00 | 68,79,907.75 | 99 |
| **போக்குவரத்துச் செலவுகள்** | | **1,081,000.00** | **10,78,863.48** | **99** | **435,000.00** | **4,01,557.72** | **92** |
| 1101 | உள்நாட்டு | 65,000.00 | 62,950.00 | 97 | 100,000.00 | 77,425.50 | 77 |
| 1102 | வெளிநாட்டு | 1,016,000.00 | 10,15,913.48 | 99 | 335,000.00 | 324,132.22 | 97 |
| வழங்கல்கள் | | 2,737,000.00 | 27,12,338.23 | 99 | 37,85,000.00 | 31,68,916.10 | 84 |
| 1201 | எழுதுபொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 8,07,000.00 | 806,840.70 | 99 | 10,55,000.00 | 10,02,952.60 | 95 |
| 1202 | எரிபொருள் | 1,788,000.00 | 17,83,851.13 | 99 | 25,00,000.00 | 20,13,293.50 | 81 |
| 1203 | உணவு குடிபானங்கள் மற்றும் சீருடைகள் | 1,40,000.00 | 1,19,696.40 | 85 | 180,000.00 | 152,535.00 | 85 |
| 1205 | ஏனையவை | 2,000.00 | 1,950.00 | 98 | 50,000.00 | 135.00 | 0 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பராமரிப்புச் செலவுகள்** | | **636,000.00** | **595,295.11** | **94** | **10,00,000.00** | **8,97,587.52** | **90** |
| 1301 | வாகனங்கள் | 5,17,000.00 | 4,76,498.75 | 92 | 8,30,000.00 | 8,18,278.12 | 99 |
| 1302 | இயந்திரங்கள் மற்றும் பொறிகள் | 1,19,000.00 | 1,18,796.36 | 99 | 1,70,000.00 | 79,309.40 | 47 |
| **சேவைகள்** | | **32,45,000.00** | **31,93,525.08** | **98** | **30,70,000.00** | **2,895,020.96** | **94** |
| 1401 | போக்குவரத்து | 1,068,000.00 | 10,67,700.00 | 99 | 14,00,000.00 | 1,312,435.50 | 94 |
| 1402 | தபால், தொடர்பாடல் | 14,20,000.00 | 13,69,560.38 | 96 | 12,00,000.00 | 1,174,399.93 | 98 |
| 1405 | ஏனையவை | 7,57,000.00 | 7,56,264.70 | 99 | 4,70,000.00 | 4,08,185.53 | 87 |
| **மாற்றல்கள்** | | **8,00,000.00** | **7,59,275.06** | **95** | **7,50,000.00** | **7,01,285.29** | **94** |
| 1506 | அரசாங்க உத்தியோகத்தர் களின் ஆதனக் கடன்களுக்கான வட்டி | 8,00,000.00 | 7,59,275.06 | 95 | 7,50,000.00 | 7,01,285.29 | 94 |
| **மூலதனச் செலவுகள்** | | **55,00,000.00** | **43,97,555.71** | **80** | **14,50,000.00** | **8,62,278.85** | **59** |
| **மூலதனச் சொத்துக்களின் புனமைப்பும் மேம்பாடும்** | | **6,63,000.00** | **6,33,101.44** | **95** | **6,36,000.00** | **5,66,023.85** | **89** |
| 2001 | கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 63,000.00 | 57,714.94 | 92 | 36,000.00 | 35,140.06 | 98 |
| 2002 | இயந்திரங்கள் மற்றும் பொறிகள் | 1,00,000.00 | 90,580.85 | 91 | 1,00,000.00 | 77,564.00 | 78 |
| 2003 | வாகனங்கள் | 5,00,000.00 | 4,84,805.65 | 97 | 5,00,000.00 | 453,319.79 | 91 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | | **41,00,000.00** | **32,80,938.27** | **80** | **1,53,000.00** | **96,995.00** | **63** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 41,00,000.00 | 32,80,938.27 | 80 | 153,000.00 | 96,995.00 | 63 |
| **ஆற்றல் விருத்தி** | | **737,000.00** | **4,83,516.00** | **66** | **661,000.00** | **1,99,260.00** | **30** |
| 2401 | பயிற்சி மற்றும் ஆற்றல் விருத்தி | 7,37,000.00 | 4,83,516.00 | 66 | 6,61,000.00 | 199,260.00 | 30 |
| **இறுதி மொத்தம்** | | **36,767,000.00** | **3,52,81,738.62** | **96** | **34,250,000.00** | **3,18,57,723.35** | **93** |

மூலம்: கணக்குப் பிரிவு - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

**அமைப்பு ரீதியான கட்டமைப்பு**

**முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்**




- துணை பணியாட்டொகுதி – தரவு உள்ளீட்டாளர், அரச முகாமைத்துவ உதவியாளர், சாரதி, அலுவலக பணிாளர்